இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633
மலர் : 150 | இதழ் : 09 | திகதி : 12.07.2026 | விலை : 50.00

# யாழ் மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்

யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்தந்தை பி. அன்ரன் றஞ்சித் அவர்கள் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் ஆனி மாதம் 29ஆம் திகதி நியமனம் பெற்றுள்ளார்.

பேரருட்தந்தை பி. அன்ரன் றஞ்சித் அவர்கள் யாழ்ப்பாணத்தில் 1966ஆம் ஆண்டு பிறந்தார் இவர் 2000ஆம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு பல இடங்களிலும் சமய, கல்வி மற்றும் நிர்வாகப்பணியாற்றியுள்ளதுடன் உரோமில் இறையியல் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தையும் கொழும்பில் கல்வியியல் டிப்ளோமாவையும் ஐக்கிய இராச்சியத்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணி M.Phil, பட்டங்களையும் பெற்றுக்கொண்டார். இவர், 2020ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி அப்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயராகத் நியமிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டார். மட்டக்களப்பு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகராக 2024ஆம் ஆண்டு ஆவணி 19ஆம் திகதி நியமனம் பெற்று இன்று வரை பணியாற்றி வருகின்றார். தற்போதைய ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் ஓய்வு காரணமாகக் கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயராக பணியாற்றி வந்த இவர் யாழ். மறைமாவட்ட ஆயராகத் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. திருத்தந்தையின் இந்நியமனக்கடிதத்தைத் தற்போதைய யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் 29ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான சிறப்பு ஒன்றுகூடலில் வாசித்துத் தெரியப்படுத்தினார்.



## புதிய ஆயரின் பணிப்பொறுப்பேற்பு

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள பேரருட்கலாநிதி பி. அன்ரன் றஞ்சித் ஆண்டகை அவர்கள், எதிர்வரும் ஆகஸ்ட் 26 ஆம் திகதி புதன்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியின் போது யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக அதிகாரபூர்வமாகப் பொறுப்பேற்கிறார்.

இந்நிகழ்வில் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களின் ஆயர்கள், குருமுதல்வர்கள், யாழ்.மறைமாவட்டகுருக்கள், துறவியர் அனைத்து ஆலயங்களிலிருந்து வரும் பொதுநிலை பிரதிநிதிகளெனப் பலர் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

புதிய ஆயரின் பணிவாழ்வும், இப்பொறுப்பேற்பு திருநிகழ்வும் தூய ஆவியானவரின் அருளாலும் வழிநடத்துதலாலும் நிறைவுறுமாறு, அனைத்து இறைமக்களையும் ஒன்றுபட்டு மன்றாடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## புதிய ஆயர் யாழ் வருகை





யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராகத் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் ஆனி மாதம் 29ஆம் திகதி நியமனம் பெற்ற பேரருட்திரு பி.அன்ரன் றஞ்சித் அவர்கள் ஆடி மாதம் 01ஆம் திகதி யாழ். மறைமாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் மற்றும் குருக்களால் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட பேரருட்தந்தை பி.அன்ரன் றஞ்சித் அவர்கள் ஆயர் இல்லக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் குருக்களுடனான கலந்துரையாடலிலும் பங்குபற்றினார்.

## புனித வளன் கத்தோலிக்க அச்சகத்திற்கு புதிய டிஜிட்டல் மயப்பட்ட கருவிகள்





யாழ்ப்பாணம் புனித வளனார் அச்சகத்தில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட புத்தகம் கட்டும் இயந்திரம், சுருள் பிணைப்பு இயந்திரம் மற்றும் ஸ்டிக்கர் வெட்டும் இயந்திரம் ஆகியவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது. அச்சகப் பணிப்பாளர் அருட்தந்தை எஸ். எயின்சிலி றொஷான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து இயந்திரங்களை ஆசீர்வதித்து அவற்றின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

நீண்ட காலமாக மனித வலுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த புத்தக ஒருங்கிணைப்புப் பணிகள் தற்போது தன்னியக்க டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட புத்தக ஒருங்கிணைப்பு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.
இத்துடன் அட்டைப்படங்களை அழகுமயப்படுத்தும் இரண்டு இயந்திரங்களும் கூடவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## ஆலயத் திறப்புவிழாவும் திருவிழாவும்





புதிதாக அமைக்கப்பட்டுவந்த உடையார்கட்டு, சுதந்திரபுரம் புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவும் திருவிழாவும் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அல்வின் கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பங்கின் புனித யூதாததேயு மறைப் பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்புடன் ஆலய முன் வீதியிலிருந்து ஆலய வளாகத்திற்கு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் அழைத்துவரப்பட்டார். தொடர்ந்து ஆயர் அவர்கள் அழகிய தோற்றத்துடன் அமைக்கப்பட்டிருந்த புதிய ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்துத் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

# எமது எண்ணம்

## “எல்நினோ” பிடியில் நாம்

இன்று புதியதோர் பெயர் அடிபடுவதைக் கேட்கிறோம். அதுதான் “எல் நினோ“ (El Nino). தற்போது தென்படும் அறிகுறிகளை வைத்துப் பார்க்கும்போது. இன்றைய ஆண்டின் “எல் நினோ“ மிகக் கடுமையாக இருக்கலாம் என்று ஏ.ஐ. ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள். ஜுன் முதல் ஆகஸ்ட் மாதங்களில் உலகளாவிய வெப்பநிலை வழக்கமான சராசரி அளவை விட மிக அதிகமாக இருக்குமென்று உலக வானிலை ஆராய்ச்சிக் கழகமும் (WMO) எச்சரிக்கை விடுத்துள்ளது.

எல் நினோ (El Nino) “எல் நினோ“ என்பது பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீர் அசாதாரணமாக வெப்பமடைவதைக் குறிக்கும் ஓர் உலகளாவிய வானிலை நிகழ்வு. இது உலகெங்கும் வறட்சி, கடுமையான மழைப்பொழிவு மற்றும் வானிலை மாற்றங்களை ஏற்படுத்தும். முற்றிலும் அறிவியல், தரவுகள் (Data) மற்றும் இயற்பியல் (Physics) விதிகளை அடிப்படையாகக் கொண்டது.

‘எல் நினோ“ கணிப்பு ஏ.ஐ.-க்கு முன் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் வருவதற்கு முன்பு, “எல் நினோ“ (El Nino) நிகழ்வின் கணிப்பு முற்றிலும் இயற்பியல் விதிகள், கடல்சார் மாற்றங்கள் மற்றும் புள்ளியியல் மாதிரிகளை (Statistical Models) நம்பியே இருந்தது.

பசிபிக் பெருங்கடலில் நூற்றுக்கணக்கான மிதவைகள் (Buoys) மூலமும், பின்னர் செயற்கைக் கோள் வழியாகவும் கடலின் வெப்பநிலை மாற்றங்கள் கண்காணிக்கப்பட்டது.

கடந்த 50-100 ஆண்டுகளாக எல் நினோவிற்குச் சில மாதங்களுக்கு முன்பு கடலிலும் காற்றிலும் நிழ்ந்த வரலாற்றுப் போக்கை (Historical Trends) தற்போதைய சூழ்நிலையோடு ஒப்பிட்டு, புள்ளியியல் முறைப்படி சூப்பர் கணினிகள் மூலமும் கணிக்கப்பட்டது.

எல் நினோ கணிப்பு- ஏ.ஐ.-க்குப் பின் இன்று கடலில் உள்ள மிதவைகள் (Buoys), செயற்கைக் கோள்கள் (Satellites) மற்றும் வானிலை ரேடார்கள் மூலம் சேகரிக்கப்படும் காற்றின் வேகம், கடல் நீர் வெப்ப நிலை, வளிமண்டல அழுத்தம் போன்ற கோடிக் கணக்கான தரவுகள் குவிந்து கிடக்கின்றன. மனிதர் இத்தரவுகளைக் கொண்டு எளிதாகக் கணக்கிட முடியாது. இந்நிலையில், சூப்பர் கம்ப்யூட்டர்கள் மற்றும் ஏ.ஐ. (AI -Machine Learning) தொழில்நுட்பம் அரிய கருவிகளாகக் கிடைத்துள்ளன.

நாம் எதிர்கொள்ளும் வானிலை அடுத்து எப்படி மாறும் என்பதை, விஞ்ஞானிகள் ஒன்று முதல் ஒன்றரை ஆண்டுகள் முன்பாகவே துல்லியமாகக் கணிக்க இந்த ஏ.ஐ. தொழில்நுட்பம் உருவெடுத்துள்ளது. இத்தகைய கணிப்புகள் முற்றிலும் தரவுகள் மற்றும் அறிவியல் விதிகளின் அடிப்படையில் அமைந்தவை. இது வெறும் யூகம் அல்ல. விவசாயம், பேரிடர், பொருளாதாரத் திட்டமிடல் என்ற முக்கிய துறைகளுக்குப் பெரிதும் உதவுகிறது.

இவ்வாண்டில் உருவாகி 2027 வரை நீடிக்கும் எல்நினோவை “சூப்பர் எல் நினோ“ என்று அழைக்கின்றனர். ஏற்கெனவே பூமி வெப்பமடைந்த நிலையில், இது பருவ மழைக்கு ஆதாரமாய் விளங்கும் கடல்நீரை மேலும் சூடாக்கிவிடலாம் என்று அஞ்சப்படுகிறது.


எல் நினோ ஆண்டுகள், பொதுவாக இந்தியாவின் தென்மேற்குப் பருவ மழையைப் பலவீனப்படுத்தும். இதனால் உள்நாட்டுப் பகுதிகளில் வெப்பம் அதிகரிக்கும். ஆனால், வெப்பச் சலன மழை வழக்கம் போலிருக்கும். இயல்பாகப் பருவகாலத்தில் கடல் நீர் வெப்ப அதிகரிப்பால் வங்காள விரிகுடா கடலில் புயல்கள் உருவாகுவதும், அவை தீவிரமடைந்து பலத்த மழையைத் தருவதும் இயல்பு.

இயற்கையின் அறியப்படு மாற்றங்களை மனிதனால் முழுமையாகக் கணிக்க முடியாத நிலையில், அடுத்த ஆறு மாதங்களில் இதன் உண்மையான வீரியமும் இயல்பு நிலையும் வெளிப்படத் தொடங்கும். இத்தகைய சூழலில், ஏ.ஐ. எச்சரிக்கைகளை நாம் தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# செயற்கை நுண்ணறிவு மனிதகுல நலனுக்குச் சேவை செய்ய வேண்டும்

– திருத்தந்தை



செயற்கை நுண்ணறிவு (AI) மனிதகுலத்தின் எதிர்காலம் குறித்த மிக முக்கியமான கேள்விகளை எழுப்பும் இக்காலகட்டத்தில், மனித மாண்பையும் பொதுநலனையும் பாதுகாக்கும் வகையில் புதிய பாதைகளைத் தேட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இம்மாதம் 7 முதல் 10 வரை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெறும் ”AI for Good Global Summit” மாநாட்டை முன்னிட்டுத் திருத்தந்தையின் சார்பாகத் திருப்பீடச் செயலர் கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்களால் கையொப்பமிடப்பட்டு அனுப்பிய செய்தியில், இவ்வாறு திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பன்னாட்டுத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU), ஐ.நா. அமைப்புகள் மற்றும் சுவிட்சர்லாந்து அரசு இணைந்து நடத்தும் இம்மாநாடு, செயற்கை நுண்ணறிவு உலகை எவ்வாறு மாற்றி வருகிறது என்பதையும், உலகளாவிய சவால்களுக்கு அதன்மூலம் தீர்வுகளை எவ்வாறு காணலாம் என்பதையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் செயற்கை நுண்ணறிவு மனிதகுலத்தின் எதிர்காலம் தொடர்பான மிக முக்கியமான கேள்விகளை எழுப்பும் இந்த வரலாற்றுச் சந்திப்பில், திருப்பீடம் உரையாடலுக்கும் ஒத்துழைப்புக்கும் எப்போதும் திறந்த மனதுடன் இருப்பதாகத் திருத்தந்தை உறுதியளித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவின் காலத்தில் மனித மாண்பைப் பாதுகாப்பது குறித்து வெளியிடப்பட்ட மகத்தான மானுடம் (Magnifica Humanitas) என்ற திருமடல், மனிதகுலத்தின் பொதுநலனையும், அனைவருக்கும் மாண்பான வாழ்க்கையையும் மேம்படுத்தும் புதிய வழிகளைத் தேடும் நோக்கில் உருவாக்கப்பட்டதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகள், பொறியிலாளர்கள், அரசியல் தலைவர்கள், பொதுப்பணியாளர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் அனுபவங்களையும் கருத்துகளையும் கவனமாகக் கேட்டறிந்த பின்னரே இந்தத் திருமடல் உருவானதாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 09 . 1938



உதிர்வு 14 . 07 . 2020

**அருட்பணி R.M.G. நேசநாயகம்**

" நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்: என் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (2 திமோ 4:7)

ஆண்டுகள் நீளலாம் ஆனால் உங்கள் நினைவுகள் நீங்காது...
இன்று நீங்கள் எம்மோடு இல்லை ஆனாலும்
நீங்கள் காட்டிய இறை பாதையில் தான் நாம் பயணிக்கின்றோம்!
மண்ணோடு மறையும் காலம் வரை எம் நெஞ்சோடு இருக்கும் உங்கள் நினைவுகள்!
உங்கள் ஆத்மா இறைவனில் இறைப்பாறட்டும்...

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

கோவிலம்மா குடும்பத்தினர்

# நீங்கா நினைவுகளுடன்...

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது (தி.பா. 116:15)

ஆண்டு நினைவு



மனுவேல்பிள்ளை
சில்வெஸ்டர்

பிறப்பு – 24.12.1931
இறப்பு – 22.01.1991

4ம் ஆண்டு நினைவு



அமரர். மேரி இமக்குலேட்
சில்வெஸ்டர்

பிறப்பு – 18.09.1938
இறப்பு – 10.06.2022

56ம் ஆண்டு நினை



அமரர். மிரியம் சாமி
சில்வெஸ்ட

பிறப்பு – 06.10.
இறப்பு – 26.06.

‘இவர்களின் ஆன்மாக்களுக்கு முடிவில்லா இளைப்பாற்றியை அளித்தருள வேண்டுமென்று
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்’



# மகத்தான மானுடம்

## சில முன்னோட்டத் தகவல்கள்

திருத்தந்தை 14 ஆம் லியோ அவர்களின் மகத்தான மானுடம் என்ற முதல் சமூக சுற்றுமடலை அறிந்து கொள்வதற்கு எதுவான சில செய்திகள், கருத்துகள், புரிதல்கள் இங்கே இடம்பெறுகின்றன.

Magnifica Humanitas என்பது இம்மடலின் தலைப்பு. இத்தலைப்பைத் தமிழில் எப்படி மொழி பெயர்ப்பது? "மாண்புமிகு மனிதம்"என்றா? "மிக மதிப்புக்குரிய மனிதம்"என்றா? மாட்சிமிகு மனிதம் என்றா? மகத்தான மானுடம் என்று மொழி பெயர்ப்பது பொருத்தமாக இருக்கலாம்.

பொதுவாகத் திருத்தந்தையரின் சுற்றுமடல்கள் தலைப்பை வைத்தே தொடங்கும். உதாரணத்திற்குத் திருத்தந்தை 13ஆம் லியோ அவர்களின் சுற்றுமடல் Rerum Novarum ( புதிய உலகு - ஆலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து) எனத் தொடங்குகிறது. ஆனால், இம்மடல் Magnifica Humanitas என்று தொடங்கவில்லை. இதன் உபதலைப்பு "செயற்கை நுண்ணறிவு" (AI) யுகத்தில் மானிடரைப் பாதுகாத்தல் என அமைந்திருக்கிறது. "மகத்தான மானுடம்"என்ற தலைப்பில் உள்ள மானுடம் அருவமான ஒரு கருத்து. நம் பார்வைக்கு அப்பாற்பட்டது. மானிடரைப் பாதுகாத்தல் என்ற உப தலைப் பில் "மானிடர்"என்பது பொருண்மையானது: நம் பார்வைக்கும் அனுபவத்திற்கும் உட்பட்டது.

"செயற்கை நுண்ணறிவு"என்பது என்ன? என்ற விளக்கம் இம்மடலில் இல்லை. மனிதர்களுக்கு இது பற்றிய புரிதல் உண்டு எனத் திருத்தந்தை எண்ணியிருக்கலாம். காதுகள், வாய் இவைகளின் நீட்சி அலைப்பேசி அல்லது கைப்பேசி எனலாம். இதுபோல மனித மூளையின் நீட்சி செயற்கை நுண்ணறிவு எனக் கொள்ளலாம்.

செயற்கை நுண்ணறிவு எப்படிச் செயற்படுகிறது? எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது? என்பதைக் காட்டிலும் இதன் நேர்மறைப் பயன்பாடு என்ன? அபாயங்கள் என்ன? என்கிறது இம்மடல்.

மனிதர் பற்றிய பல புரிதல்கள் உள்ளன. மனிதர் விலங்கினத்தைச் சார்நதவர் என விலங்கியலும் உயிரியலும் கூறுகின்றன. விலங்குகளிலிருந்து மனிதரை வேறுபடுத்துவது அவரது சிந்திக்கும் ஆற்றல். எனவே, அரிஸ்டாட்டில் "புனிதர் சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த விலங்கு "என்றார். நவீன தத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் பிரான்ஸ் நாட்டு றெனேடெகார்ட் "சித்திக்கிறேன், எனவே நான் இருக்கிறேன் "என்றார்.

சமூகவியல், சமூக உளவியல் ஆய்வாளர்கள் "மனிதர்கள் உறவு சார்ந்தவர்கள், உறவுகளால் உறவுகளுக்காக வாழ்வதே மனித வாழ்வு"என்கின்றனர்.

"மனிதர் அடிப்படையில் உழைக்கும் உயிரினம். இயற்கையை மாற்றி, உழைப்பின் மூலம் தன்னையும் சமூகத்தையும் உருவாக்குபவர் மனிதர்"என்கிறார் சார்ல் மார்க்ஸ். "மனிதரை மனிதராக அடையாளப்படுத்துவது பண்பாடு (Culture) எனவே மனிதர் பண்பாட்டு விலங்கு" என்கிறது மானுடவியல்.

கடவுளால் படைக்கப்பட்ட அனைத்திலும் மகத்தானது மானுடம்: ஏனெனில் "கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்டவர் மனிதர்"(தொநூ 1: 26 - 27) என்கிறது இச்சுற்றுமடல்.

**முன்னுரை**

மனிதத்தின் உண்மையான தன்மை சிதைக்கப்படும்போது கிறிஸ்தர்களாகிய நாம் மனுவுருவான இறைவனை நோக்கிக் கண்களை உயர்த்துகிறோம். ஏனெனில் வார்த்தை மனுவுருவான மறைபொருளில் தான் மானுடம் என்ற மறைபொருள் தெளிவாகிறது. ஒவ்வொரு தலைமுறையும் மனிதருடைய மாண்பைப் பாதுகாக்கவும், நீதியை வளர்த்தெடுக்கவும். சகோதரத்துவத்தைச் செயற்படுத்தவும் கடமைப்பட்டிருக்கிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் திறந்த மனத்தோடு கூடிய உரையாடலை மானிட வாழ்வின் இன்றியமையாத கூறாகக் கருதுகிறது. அனைத்துச் சகோதர, சகோதரிகளோடு திறந்த மனத்தோடு உரையாடி உண்மையான மானுடத்தைக் கண்டறியத் திரு அவை அழைப்பு விடுகிறது என்கிறது இம்மடல். திருஅவை உலகக் காரியங்களில் தலையிட்டு நேரத்தை விரயமாக்க வேண்டாமெனச் சிலர் கூறுகின்றனர். இதற்குத் திருத்தந்தை 13-ஆம் லியோ, "நற்செய்தி அறிவிப்பு என்பது மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைப் புறந்தள்ள முடியாது" என்று பதிலுரைத்தார். இப்பாரம்பரியத்தைத் தொடர்ந்து நானும் தொடக்கம் முதல் இவ்வுலகில் செயற்பட்டு வரும் ஆவியாரின் துணை வேண்டி (நீமொ 8:22-31). இன்றைய எண்ணியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு உலகில் இச்சுற்றுமடலை எழுதுகிறேன் என்கிறார் திருத்தந்தை 14ம்லியோ,

"மானிடராகிய நாம் எத்தகைய இலக்கை நோக்கி நகர விழைகிறோம்?" என்ற கேள்வியை எழுப்பி, திரு விவிலியத்திலிருந்து இரண்டு காட்சிகளை முன் வைக்கிறது இம்மடல். ஒன்று. பாபேல் கோபுர உருவாக்கம் (தொநூ 11:1-9) மற்றொன்று. நெகேமியா எருசலேம் சுவர்களைத் திரும்பக் கட்டுவது (நெகே 2-6).

பாபேல் கோபுரம் கடவுள் இல்லாத உலகைக் கட்டமைக்கிறது. பன்மையை ஒதுக்கி, ஒற்றைமையத்தை உருவாக்குகிறது. மனித முகத்தை அழித்து, தோழமை உறவைக் கெடுக்கிறது. தன்மையப்போக்கில் தானும் தன் கணினியும் போதும் என்று மானிட உறவுகளைத் தவிர்க்கிறது. மாறாக, பாபிலோன் நாடு கடத்தலிலிருந்து திரும்பி வந்த நெகேமியா நோன்பிலிருந்து இறைவேண்டல் செய்து, மக்களுக்காகப் பரிந்து பேசுகிறார். அழிக்கப் பட்ட சுவர்ப்பகுதிகளை அமைதியில் ஆய்வு செய்கிறார்.

அனைவரோடும் இணைந்து சிதிலமடைந்த சுவர்களைத் திரும்பக் கட்டி எழுப்புகிறார். இங்கு மனிதர்களின் பன்மைத் தன்மையும் கூட்டு முயற்சியும் சகோரத்துவமும் வெளிப்படுகின்றன. இக்கூட்டு முயற்சி ஒருவருக்கொருவர் செவிமடுத்து, உரையாடி பொது நன்மையின் மேல் நீதிப் பண்பாட்டையும், சகோதரத்துவத்தையும் உருவாக்குவதைச் சாத்தியப்படுத்துகின்றது. திருவெளிபாடு சொல்வதுபோல் "புதிய ஜெருசலேம் என்னும் திருநகர் கடவுளிடமிருந்து விண்ணகத்தை விட்டு இறங்கி வரும்" (திவெ 21:2) என்பதைக் காணமுடியும்

---




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: எல்லாம் தெரிந்தவர்கள்போல சிலர் நடந்துகொள்கிறார்கள். ஆனால், எல்லாம் தெரிந்தவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள்போல இருந்துகொள்கிறார்கள்! காரணம் என்ன?**

**பதில்:** அன்ரன், 'எல்லாம் தெரிந்தவர்கள் மாதிரிப் பேசுபவர்களிடம் எதுவும் தெரியாதவர்கள் மாதிரி நடந்துகொள்வதுதான் புத்திசாலித்தனம்.' ஆதலால், எல்லாம் தெரிந்தவர்கள் என்று காட்டிக் கொள்கிறவர்களிடம், எல்லாம் தெரிந்தவர்கள் எதுவும் தெரியாதவர்கள்போல நடந்து கொள்கிறார்கள்! புரிகிறதா?

*(குடிமகன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: பாடசாலைகள், கல்லூரிகள், கோவில்கள் போன்ற இடங்களுக்கு அருகில் உள்ள 717 மதுபானக் கடைகளைத் தமிழ் நாட்டு அரசு மூடுவதாகத் தமிழ்நாட்டுத் தகவல் தெரிவிக்கிறது. இதுபோன்று நமது நாட்டிலும் செயற்படுத்தலாம்தானே! ஏன் வளர்ந்துவரும் நாடான எமது நாட்டில் அதிகமான மதுபான சாலைகளை அமைக்க அரசு அனுமதி வழங்கியிருக்கிறது?**

**பதில்:** குடிமகனே, 'குடிகாரன் கீழ விழுந்தால் தூக்கிவிட மாட்டாங்க. ஆனால், பொருளாதாரம் கீழ விழுந்தால் குடிகாரந்தான் தூக்கி விட வேண்டியிருக்கு. இப்படிக்குக் குடிகாரன்' என்றொரு வாசகத்தை அண்மையில் படித்தேன். நீங்கள் கேட்ட கேள்விக்குக் குடிகாரனே அருமையான பதில் கொடுத்திருக்கிறான். 'வரம்புயர நீர் உயரும்' என்ற ஔவையாரின் ஆத்தி சூடியில் அருளிய செய்யுளில் 'குடி உயரக் கோல் உயரும்' என்றொரு அடியும்(வரி) இருக்கிறது. இங்கு ஔவையார் 'குடி உயர' என்று கூறுவதன் வழியாக குடும்பம், குடும்பங்களின் வாழ்வு செழித்தால் 'கோல் உயரும்' அதாவது ஆட்சி செழிக்கும் என்கிறார். ஆனால், நம்முடைய தலைவர்கள் இந்தக் 'குடி'யைத் தண்ணியடிக்கிறதைக் கூறிவைத்திருக்கிறாரோ என்ற நினைப்பில் அமுத சுரப்பிகளை, அதாவது, மதுபானச்சாலைகளை களியாண மண்டபம் கட்டித் திறப்பதுபோல தெருவுக்குத்தெரு, திறந்து வைத்திருக்கிறார்கள். அதனால், 'குடி உயர' அதாவது மதுபானசாலைகளின் வருமானம் அதிகரிக்க அரசுக்கு எக்கச்சக்கமான வருமானம் வருவதால் குடிச்சாலைகளை அதிகமாகத் திறக்க ஆமோதிக்கிறார்கள்.

*(றமேஷ், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: நாட்டின் ஜனாதிபதி அனுரா திசாநாயக்க அவர்கள், பிரிவினை வாதத்திற்கு நாட்டில் இடமில்லை, இனி ஒருபோதும் நாட்டில் யுத்தம் ஏற்படாது என்று 17வது தேசிய போர் வீரர்கள் தினத்தில் உரையாற்றி இருக்கிறார். இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

**பதில்:** 'பிரிவினைவாதத்திற்கு நாட்டில் இனி இடமில்லை' என்பது சரி! ஆனால், நாட்டில் ஒன்றாக வாழமுடியாத சூழல் இனியும் ஏற்பட்டால் பிரிந்து போவதற்கான விருப்பத்தை எடுத்துச் சொல்வதற்கான சுதந்திரம் உண்டுதானே! 'இனி ஒருபோதும் நாட்டில் யுத்தம் ஏற்படாது' என்று கூறியிருப்பதும் நன்று. யுத்தத்தை உருவாக்காமல் இருப்பதும் அரசின் பாரிய பொறுப்புத்தானே! அதனால், அவர் கூறிய கூற்றுச் சரியானது. செயற்படுத்த வேண்டும். நடந்தவற்றுக்கான பொறுப்புக்கூறல், பாதிப்புற்ற மக்களுக்கான நீதி, அனைவருக்குமான சமத்துவ வாழ்வு போன்றவை இல்லாமல் நல்லிணக்கம், சகவாழ்வு, ஐக்கியம் எல்லாம் பேச்சளவிலேயே நன்றாக இருக்கும்!

*(யூடி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: வாழ்க்கையில் எத்தனை சவால்களைத்தான் சந்திக்க வேண்டி இருக்கிறது! வாழ்க்கையைக் கஸ்ரமாக நீங்கள் உணர்ந்ததில்லையா?**

**பதில்:** யூடி, 'வாழ்க்கை கடினம் அல்ல, வாழ்வதும் கடினம் அல்ல, நம்மைச் சுற்றி உள்ளவர்களை சமாளிப் பதுதான் மிகமிகக் கடினம்' என்ற ஒருவருடைய அனுபவ வரிகளுள் என் சிந்தனையோடு ஒத்துப்போவதால் உங்கள் கேள்விக்குப் பதிலாக அதனைத் தருகிறேன்.

*(வசந்தன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இவ்வாண்டு மே 18 முள்ளிவாக்கால் நினைவேந்தலைத் தொடர்ந்து பல சர்ச்சைகள் உருவாகியுள்ளன. இது, எதனைக் காட்டுகிறது?**

**பதில்:** வசந்தன், 'பீரிஸ்'சின் கருத்துக்கு 'பெர்னாண்டோ' கருத்துரைக்கப் போய் அது பெரும் அதிர்வலைகளை நாட்டில் ஏற்படுத்தி இருக்கின்றன. ஒரு வீட்டுக்குள் வாழுகிறவர்கள் இடையேயே புரிந்துணர்வு இல்லை, பொது மனப் பான்மை இல்லை! பிறகு எப்படி வெளியே உள்ளவர்களிடம் எதிபார்க்க முடியும்? உண்மையை ஏற்பதற்குப் பெரும்பாலானவர்கள் தயாராய் இல்லை என்பது இச்சர்ச்சைகள் ஊடாக வெளிப்படுகிறது. அதாவது, இவ்வளவு அழிவுகளைச் சந்தித்த பின்னரும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களைத் தவிர ஏனையவர்களின் மனங்கள் இன்னும் இறுகிப்போய்த்தான் கிடக்கின்றன என்பதையே காட்டுகிறது. மத நம்பிக்கையை விட இனமானம்/ துவேசம் ஆட்சிசெய்கிறது என்று கொள்ளலாம். இனத் துவேசம் பற்றிக் கொண்டதென்றால் நடுநிலைமையோடு நடக்கவேண்டிய தலைவர்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல!

*(சாள்ஸ், மன்னார்)*

**கேள்வி: இயற்கையைப் பாதுகாக்கவேண்டும் என்று மறைந்த திருத்தந்தை தமது திருமடலில் தெளிவாகக் கூறியிருக்கிறார். இதுபற்றி மறையுரைகளில் அடிக்கடி கேட்கிறோம். ஆனால், பெருநாட்கள் முடிந்ததும் ஆலய வளாகங்கள் 'ஷொப்பிங் பாக்':, பிளாஸ்டிக் போத்தல்கள் எனக் குப்பைத் தொட்டிகளாகக் காட்சி தருகின்றனவே?**

**பதில்:** ஆலய,கோவில் திருவிழாக்கள் உச்சமாக

தொடர்ச்சி 6ம் பக்கம்

# ஓய்வு நிலை ஆயர் தோமஸ் ஆண்டகைக்காக இறையருள் வேண்டுவோம்



இ.அ.அமலரட்ணம்

### முகவுரை

கத்தோலிக்க திருஅவையில் ஆயர் பணி என்பது மிக முதன்மையானது. ஒரு மறைமாவட்டத்தை இறையாட்சி செய்து அதை நிர்வகிப்பது இறைமகன் யேசுவின் முப்பணிகளான ஆசிரியர், குரு, ஆயன் எனும் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து இறை மக்களை இறையாட்சியின் பாதையிலே வழிநடத்துவதும் மிக முக்கியமானது.

அத்துடன் உறுதிப்பூசுதல் மற்றும் குருத்துவம் எனும் இரண்டு அருட்சாதனங்களையும் ஆயர் மட்டுமே நிறைவேற்றலாம் என்பதால், ஒரு மறைமாவட்டத்துக்கு ஆயரின் தேவை அவசியமாகின்றது. எமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய முன்னாள் யாழ் மறைமாவட்ட ஆயர் வேரருட் தந்தை இம்மானுவேல் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் ஆயர் பணியில் இருந்து ஓய்வு பெற்று ஏறக்குறைய பதினொரு ஆண்டுகள் கடந்துவிட்டன. அவரை நன்றியோடு நினைக்கவும், அவருடைய உன்னதமான ஞானம் நிறைந்த ஆயர்த்துவப் பணிகளுக்காக நன்றி கூறவும் இறைவனுக்குப் புகழ்பாடவும் நாம் மறந்துவிடக்கூடாது.

### யூலை மாதம் ஆயருக்குரியது

யூலை மாதம் என்று சொல்லுகின்ற போது எமக்கு ஆயர் தோமஸ் ஆண்டகையின் நினைவு வரவேண்டு:ம். அவரை நினைக்கவும், அவருக்காக இறைவேண்டல் செய்யவும் இந்த மாதம் எமக்கு வாய்ப்பைத் தருகின்றது. இந்த மாதத்தை யாழ் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயரின் மாதம்" என்று சொன்னால் அது மிகையாகாது. இம்மாதத்தில் ஆயர் அவர்கள் நான்கு முக்கிய நிகழ்வுகளை நினைவு கூருகின்றார். பெரும் கொடையாக இவரைத் தந்து யாழ், மன்னார் மறைமாவட்டங்களை ஆயனுக்குரிய பரிவோடு வழிநடத்த, அருளிய இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அவருடைய உடல் உள ஆன்மீக நலன்களுக்காக நாம் செபிக்கவும் அழைக்கப்படுகின்றோம்.

### பெயர் கொண்ட தினம்

ஓய்வு நிலை ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்கள் யூலை மாதம் மூன்றாம் திகதி புனித தோமையாரின் பெரு விழாவன்று தனது பெயர் கொண்ட புனிதரின் விழாவைக் கொண்டாடுகின்றார். ஆண்டவர் யேசுவின் திருத்தூதர்"களில் ஒருவரான புனித தோமா எப்படி இறைவனிடம் தனிப் பற்றுதல் கொண்டிருந்தாரோ, அதுபோல தன்னுடைய வாழ்க்கையிலே இறைபற்றுடையவராக வாழ்ந்தார். என் ஆண்டவரே என் கடவுளே என்று தன்னுடைய ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்தி திருமறைக்காக அயராது உழைத்து இறையரசைப் பரப்பி புனித தோமாவைப் போல அவர் வழி நின்று ஆயர் அவர்களும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். எனவே ஓய்வு நிலையில் இருக்கும் ஆயர் அவர்கள் மகிழ்வொடும் உடல்நலத்தோடும் வாழ, புனித தோமையாரின் பரிந்துரைக்காக மன்றாடுவோம்.

### யாழ். மறைமாவட்ட ஆயராக நியமனம்

யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் மேதகு வஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை ஆண்டவை அகர்கள் தன்னுடைய 75 ஆவது வயதில் ஆயர் மணியில் இருந்து இளைப்பாறியபோது அப்போது மன்னார் மறைமாவட்ட அயராக இருந்த மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் யாழ் மறைமாவட்ட ஆயராக திருத்தந்தையால் நியமனம் பெற்றது 1992ம் அண்டு யூலை மாதம் 6ம் திகதியாகும். இத்தினமும் ஆயரின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாகும். புதிதாக உதயமான மன்னார் மறைமாவட்டத்தை 11 வருடங்கள் சிறப்பாக வழிநடத்திய பின் இந்நியமனம் வழங்கப்பட்டது. யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் பங்குத்தந்தையாகவும், பல மறைமாவட்டப் பணிகளிலும் சிறப்பாகப் பணிபுரிந்த ஆயர் அவர்கள் எமது மறைமாவட்டத்துக்குக் கிடைத்தது இறைவனின் கொடையன்றி வேறில்லை.

### ஆயரின் பிறந்த தினம்

ஆயர் அவர்கள் ஊர்காவற்றுறையைச் சொந்த இடமாகக் கொண்டவர். 1938ஆம் ஆண்டு யூலை மாதம் 13ம் திகதி வரப்பிரகாசம் இம்மானுவேல், தோமஸ் சவிரியாச்சி தம்பதிகளுக்கு அன்பு மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கும்போது இறை அழைத்தல் ஊக்கம் பெற்று 1953ம் ஆண்டு புனித மடுத்தீனார் குருமடத்தில் தன்னை இணைத்துக் கொண்டபின் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வியை நிறைவு செய்தார். தனது மெய்யியல் இறையியல் படிப்புக்களை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் நிறைவு செய்தவின் 1963 ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் திகதி மறைந்த முன்னாள் ஆயர் மேதகு ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அண்டகையால் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் குருவாக அபிசேகம் செய்யப்பட்டார்.

யாழ் மறைமாவட்டத்தில் பேராலயப் பங்கு உட்பட பல பங்குகளிலும் அப்போது யாழ் மறை மாவட்டத்தின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த மன்னார் மறைமாவட்டப் பங்குகளிலும் பணி புரிந்ததோடு மறைக்கல்விக்கும் பொறுப்பாக இருந்து சிறப்பான பணிகளை முன்னெடுத்தார். இந்தியா பெங்களூரில் மறைக்கல்வியில் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். றோம் நகர் ஊர்பானியா பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி கற்றுக் கொண்டிருக்கும்போது ஆயர் பணிக்கான அழைப்பைப் பெற்றுக்கொண்டார்.

### ஆயராக அருட்பொழிவு

யாழ். மறைமாவட்டத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்த மன்னார் மற்றும் வவுனியா நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கி மன்னார் மறை மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டபோது அம் மறை மாவட்டத்தின் முதல் ஆயராக 1981ம் ஆண்டு தை மாம் 24ம் திகதி திருத்தந்தையால் நியமனம் பெற்றார். தூர நோக்கும் நிதானமான சிந்தனைப் போக்கும், எதையும் தாங்கும் இதயமும் உறுதியான விசுவாசமும் கொண்ட அருட்பணி தோமஸ் அடிகள் 1981ம் ஆண்டு யூலை மாதம் 30ம் திகதி மடுத்திருப்பதியில் ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார். யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் இலங்கையில்அனைத்துமறைமாவட்ட ஆயர்களும் திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியும், ஏராளமான குருக்கள் துறவிகள் பொதுநிலையினர் கலந்து கொள்ள ஆயத்துவ அபிஷேக நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

### துன்புறும் ஆயனாக

இவருடைய பணிக்காலம் மிகவும் சவால்கள் நிறைந்ததாக இருந்ததை மறுக்க முடியாது. இவர் குருவாக அருட்பொழிவு பெற்ற பின் தனது அன்புத்தாயையும் பாசமிகு சகோதரியையும் புகையிரத விபத்தில் இழந்தாலும் தன்னுடைய நம்பிக்கை வாழ்வை இழக்கவில்லை. தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற பாரிய மோதல்கள், அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வுகள் மக்களின் உயிர் இழப்புக்கள் என்பன ஆயரின் பணி வாழ்வில் சவாலாக அமைந்தது. அத்துடன் பல குருக்களின் காணாமல் போதல்கள், தாக்குதலில் குருக்கள் இறந்தமை, பாரிய வலிகாம இடப்பெயர்வு மற்றும் சுனாமிப் பேரலை என்பன ஆயர்த்துவ பணிவாழ்வில் பெரும் சிலுவைகளாக அமைந்தன. தன்னுடைய இறை நம்பிக்கையை ஆழப்படுத்தி, சவால்களை வென்று துன்புறும் கிறிஸ்துவாக தன்னுடைய பணிகளை முன்னெடுத்தார்.

### நிறைவாக

ஓய்வுக் காலமும் இறைவனின் மாபெரும் பொடையாக அமைகின்றது. செபத்திலும் தியானத்திலும் ஈடுபட்டு இறைவனோடு இணைந்து வாழவழி வகுக்கின்றது. இவ்வருடம் ஆயர் தமது 88 ஆவது அகவையை நிறைவு செய்கின்றார். அழைத்தல் வாழ்வில் 63 வருடங்களும் ஆயராக 45 வருடங்களும் கடந்து ஓய்வு நிலையில் இரக்கும் ஆயரை நன்றியோடு நினைப்போம், ஆயரின் குருத்துவ ஆயர்த்துவ பணிகளுக்காக இறைவனைப் புகழ்ந்து எப்போதும் ஆயரை எமது செபங்களில் தாங்கி நிற்போம்.


## அக்வைனஸ் ஆங்கில மொழி மற்றும் இலக்கிய டிப்ளோமா

**மாணவர் சேர்க்கை தற்போது நடைபெறுகிறது**

கொழும்பு 08, அக்வைனஸ் உயர் கல்விக் கல்லூரியுடன் இணைந்து, பத்திரிசியார் உயர் கல்வி நிறுவனம் வழங்கும் டிப்ளோமா கற்கைநெறி

**கற்கைநெறியின் முக்கிய அம்சங்கள்**

மொத்தம் ஐந்து நிலைகள்:
சான்றிதழ் நிலை
1, சான்றிதழ் நிலை
2, சான்றிதழ் நிலை
3, இடைநிலை மற்றும் இறுதிநிலை

ஒவ்வொரு நிலையும் ஆறு மாதங்கள் தகுதிகாண் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் உரிய நிலைக் குத் தெரிவுசெய்யப்படுவர்

**வகுப்புகள்: சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்**
**காலை 8.00 மணி முதல் மாலை 1 மணி வரை**

**கற்கைநெறிக் கட்டணம்**
சான்றிதழ் நிலைகள்: ரூ. 22,000.00 ஒரு நிலைக்கு
இடைநிலை: ரூ. 25,000.00
இறுதிநிலை: ரூ. 27,000.00

**அனுமதித் தகுதி**
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

**கற்பிக்கப்படும் பாடப்பகுதிகள்**
இலக்கணம், பேச்சுத் திறன், வாசிப்புத் திறன், எழுத்துத் திறன், உச்சரிப்பு, சமர்ப்பித்தல் திறன், ஆங்கில இலக்கியம் மற்றும் தலைமைத்துவ உருவாக்கம் ஆகியவை இக்கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐந்து நிலைகளையும் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு, கொழும்பு அக்வைனஸ் உயர் கல்விக் கல்லூரியினால் ஆங்கில மொழி மற்றும் இலக்கிய டிப்ளோமா வழங்கப்படும்.

**முக்கிய தினங்கள்**

தகுதிகாண் பரீட்சை: 25 யூலை 2026 - கற்கைநெறி ஆரம்பம்: 8 ஆகஸ்ட் 2026
**இடம் :** பத்திரிசியார் உயர் கல்வி நிறுவனம்
புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம்

*தொடர்புகளுக்கு :*
தொலைபேசி: 077 904 7651
மின்னஞ்சல்: patricianhigherstudies@gmail.com
**உங்கள் அனுமதியை உறுதிசெய்ய முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்!**

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**பத்திரிசியார் உயர் கல்வி நிறுவனம்**

# கிளாலிக் கிராமத்தில் சந்தியோகுமாயோருக்குத் தனித்துவமான புதிய சித்திரத்தேர்

வட இலங்கைத் திருஅவையின் ஆன்மீக மற்றும் கலாசார வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் 2026 யூலை 24 அன்று எழுதப்படவுள்ளது. கிளாலி புனித யாக்கோபு அப்போஸ்தலர் ஆலயத்தின் வருடாந்தத் திரு விழாக் கொண்டாட்டங்களின் போது, புதிதாக வடிவமைக் கப்பட்டுள்ள 'தேர்' மங்களகரமான முறையில் ஆசீர்வதிக் கப்பட்டு, அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

நன்கு திட்டமிடப்பட்டு, நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகள் கொண்டதாய், வடிவமைக்கப்பட்டு மிக அழகிய முறையில் வர்ணம் தீட்டப்பட்டுள்ள இந்தப் புதிய தேர், மக்களின் விசுவாசம், சவால்களை எதிர்கொள்ளும் மன உறுதி மற்றும் சமூக ஒற்றுமையின் உன்னத அடை யாளமாக நிமிர்ந்து நிற்கிறது. யுத்தத்தினால் பாதிக்கப் பட்டு மூன்று தசாப்த காலமாகத் தடைப்பட்டிருந்த ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தை மீண்டும் உயிர்ப் பிக்கும் நோக்குடன், உலகெங்கிலும் வாழும் கிளாலி மக்கள், நவநாள் பக்தர்கள், அடியார்கள், கிராமவாசிகள் மற்றும் நலன்விரும்பிகளின் தாராளமான நிதிப் பங்களிப் புடன் இத்தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் பாவனையில் இருந்த பழைய தேரினை பெரிதும் ஒத்ததாகவே அமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும்.

ஆலய வரலாற்றில் மீண்டும் புதிதாய் நடை- பெறுகின்ற இந்தத் தேர்ப் பவனி மறக்கமுடியாத ஒரு நிகழ்வாக அமையும் என்பதில் ஐயமில்லை. புதிய தேர் மங்களகரமாக ஆசீர்வதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதில் புனிதம் மிக்க கன்னி மரியா மற்றும் புனித யக்கோ- பு அப்போஸ்தலர் (சந்தியோகுமாயோர்) ஆகியோரின் திருச்சுரூபங்கள் வைக்கப்பட்டு, கொடிமரத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான பக்தர்களால் வடம்பிடித்து இழுக்கப் படவுள்ளது.

தேர்ப் பவனியின் போது, பக்தர்கள் அனைவரும் புனித யாக்கோபு அப்போஸ்தலரின் மன்றாட்டு மாலையை ஒப்புவித்து, அவரைப் போற்றிப் பாடி, பாரம்பரிய இசை மற்றும் மேள தாள முழக்கங்களுடன் தங்களின் பக்திப் பெருக்கை வெளிப்படுத்தி வலம் வருவர். வண்ணமய- மான ஆலவட்டங்களை ஏந்தியவாறு பங்குமக்களும், பக்தர்களும் அணிவகுத்து வர, ஏராளமான குருக்கள், துறவிகள் மற்றும் ஆன்மீகப் பெரியார்களின் பங்கே- ற்புடன் இந்நிகழ்வு மிகவும் கம்பீரமாகவும், நெஞ்சை நெகிழவைக்கும் மாபெரும் விழாவாகவும் அமைய வுள்ளது.

**கடந்த காலப் பின்னணி**

160 வருடங்களுக்கு மேலாக பாவனையில் இருந்ததும், இலங்கை நாட்டின் வேறெந்தக் கத்தோலிக்க ஆலயத்திலேயும் இருந்திராததுமான மிகவும் தனித்துவ- மான சித்திரத்தேர் கிளாலி புனித சந்தியோகுமாயோர் ஆலயத்திலே பயன்பாட்டில் இருந்து வந்தது. சிறப்பும் தனித்துவமும், மிகுந்த யாத்திரை ஸ்தலமாக 192 வரு டங்களுக்கு முன்னரே இது விளங்கியதைப் பிரபல நூலாசிரியர் சைமன் காசிச்செட்டி குறிப்பிடுகிறார்.

அவருடைய பெரிய அகராதியான சிலோன் கெட்டியர் (The Ceylon Gazetteer) என்ற நூலில் அவர் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். 1834ம் ஆண்டு இலங்கையிலே எழுதப்பட்டு இந்தியாவிலே நியூ டெல் கியிலே அச்சுப்பதிவு செய்யப்பட்டது இந் நூல். இந்த நூலின் முதற்பதிப்பு கொட்டா சேர்ச் பிரஸ் (Cotta Church Press) நியூ டெல்கியிலே அச்சிடப்பட்டது. இந்த அகராதி யின் 142 ஆம் பக்கத்திலே கிளாலிக் கிராமத்தைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது.

Klaly, a small village and rest house on the road to Trincomalee, 20 miles south east of jaffnapatam. It is noted for a Roman Catholic Church, dedicated to St. James the Greater, which attracts a great number of pilgrims from different parts of the Island. The image of the saint is every year, after the termination of the feast day, set on a car and drawn along the streets, in the same manner as the Hindoos parade their idol at Ramisseram. (The Ceylon Gazetteer page 142, First Published by COTTA CHURCH PRESS Ceylon in 1834, New Delhi).

கிளாலி, இது யாழ்ப்பாணத்திலிருந்து தென் கிழக்கே 20 மைல் தொலைவில், திருகோணமலை செல்லும் வீதியில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் மற்றும் தங்குமிடமாகும். (Rest house). இங்குள்ள பெரிய யாக்கோபு (St. James the Greater) முனிவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட உரோமன் கத்தோலிக்க தேவாலயம் மிகவும் புகழ்பெற்றது. இது தீவின் பல்வேறு பகுதிக- ளிலிருந்தும் ஏராளமான யாத்திரிகர்களை ஈர்க்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவின் இறுதியில் புனிதரின் திருவுருவம் ஒரு தேரில் வைக்கப்பட்டு வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுகிறது. இராமேஸ்வரத்தில் இந்துக்கள் தங்கள் தெய்வங்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வதைப் போலவே இந்த நிகழ்வும் நடைபெறுகிறது.
(The Ceylon Gazetteer page 142, First Published by COTTA CHURCH PRESS Ceylon in 1834, New Delhi).

தலைமுறை தலைமுறையாக, கிளாலி ஆல- யத்தின் வருடாந்தத் திருவிழாக் கொண்டாட்டங்களின் மையப்புள்ளியாகவும், மக்களின் அசைக்க முடியாத பக்தியின் சின்னமாகவும் பழைய தேர் விளங்கியது. துரதிஷ்டவசமாக, வட இலங்கையில் நிலவிய கடும் போர்ச் சூழலால் அந்தப் பழைய தேரும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயத்தின் பெரும்பகுதியும் முற்றாக அழிக் கப்பட்டன. இதனால், ஆயிரக்கணக்கான குடும்பங் களையும் யாத்திரிகர்களையும் ஒன்றிணைத்த ஒரு நீண்டகாலப் பாரம்பரியமும் திடீரென முற்றுப்பெற்றது.

இருப்பினும், தங்களின் ஆன்மீகப் பாரம்பரியத் தைப் பாதுகாப்பதில் உறுதியாக இருந்த கிளாலி மக்கள், புதியதோர் ஆலயத்தைக் கட்டியெழுப்பும் உன்னதப் பணியில் இறங்கினர். உலகளாவிய ரீதியில் வாழும் அடியார்கள், புலம்பெயர் மக்கள் மற்றும் கொடையா- ளர்களின் தாராளக் கொடையினால் புதிய ஆலயம்



கட்டப்பட்டு, 2021 யூலை மாதம் யாழ் ஆயரால் மிக விம ரிசையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன் பின்னர், இவ்வாலயம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து, குறிப்பாக தூய யாக்கோபு அப்போஸ்தலர் திருவிழாக் காலத்தில் ஆயிரக் கணக்கான பக்தர்களை ஈர்க்கும் ஒரு புனித தலமாக விளங்கி வருகிறது.

**அன்றைய ஏழு கூடுகள்**

இந்தப் புனிதரின் தேர்த் திருவிழாவிற்கு முன்பு ஏழு கூடுகளின் ஆடம்பரப் பவனி கண்கொள்ளாக் காட்சியாக, அருட்சிமிக்க யாத்திரைப் பவனியாக நடை- பெற்று வந்த நினைவுகள் என் மனதில் இன்றும் பசுமை யாக நிலைத்திருக்கின்றன. இந்தப் பவனி ஆடி 23ம் திகதி மாலையிலே நான்கு மணியளவில் ஆரம்பமாகும். கிளாலியில் உள்ள புனித அந்தோனியார் கோவிலில் இருந்து புனித அந்தோனியாரினதும், புனித செபஸ்தியா ரினதும், புனித பிரான்சிஸ் சவேரியாரினதும் மூன்று கூடுகளும் புறப்பட்டு, புனித கண்மணி மாதா ஆலயத் திற்கு வரும். அந்த ஆலய மக்கள் புனிதர்களை வரவேற்று புனித கண்மணி மாதா திருச்சுரூபத்தைத் தாங்கிய கூட்டோடு பவனியிலே இணைந்து, புனித தோமையார் ஆலய மக்களின் வரவேற்புடன் புனித தோமையாருடைய திருச்சுரூபம் தாங்கிய கூடும், பவனியில் இணைந்து அதிதூதரான புனிதமிக்கேல் ஆலயத்திற்கு வந்து, ஆலய மக்களின் வரவேற்புடன் அதிதூதரான புனித மிக்கேலின் கூடும் பவனியில் இணைந்து புனித சந்தியோகுமாயோரின் ஆலயத்தை நோக்கி வரும்.

சந்தியோகுமாயோர் ஆலயத்தில் இருந்து பக்- தர்கள் இந்தப்பவனியை சந்திக்க வந்து ஆலவட்டங்கள் மேளதாளங்களுடன் புனிதர்களின் கூடுகள் அனைத் தையும் சந்தியோகுமையோர் ஆலயத்திற்கு அழைத்து வரும் காட்சி பக்திப்பரவசம் ஊட்டும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருக்கும். இடைப்பட்ட காலத்திலே தடைபட்ட இந்த ஏழு கூடு நிகழ்வு மீண்டும் வராதா என்று பக்தர்கள் எதிர்பார்த்து ஏங்குவது நாம் பலரும் அறிந்த உண்மையாகும்.

**சந்தியோகுமையோர் அம்மானை**

தமிழ்நாட்டின் நாட்டுப்புற மரபுகளில் ஒன்றான அம்மானை, இலங்கையிலே உருவாக்கப்பட்டு ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதலாவது அம்மானை என்ற தன- ித்துவத்தோடு அச்சுவாகனம் ஏறியிருக்கின்ற அம்மானை- யாக சந்தியோகுமாயோர் அம்மானை விளங்குகின் றது.

எங்கள் கிளாலி ஊரிலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சந்தியோகுமையோருக்கு என்றே தெல்லிப்பளையைச் சேர்ந்த பேதுருப்புலவரால் 1647ம் ஆண்டு இது இயற்றப்பட்டு இன்றும் பாவனையில் இருக்கி- ன்றது என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகின்றேன்.

**நிறைவாக**

மீண்டும் புதியதோர் தேர் என்னும் இப்பாரிய திட் டத்தை சாத்தியமாக்கிய அனைத்துக் கொடையாளர்களுக் கும், குறிப்பாக ஆலயத்துடன் நேரடித் தொடர்பில்லாவிட்டா லும், தூய யாக்கோபு அப்போஸ்தலர் மீதுள்ள விசுவாசத்தி- னால் தூண்டப்பெற்று நிதியுதவி செய்த நல்லுள்ளங்களுக் கும், புனிதரின் பரிந்துரையால் இறையருள் நிறைவாகக் கிடைப்பதாக. அத்துடன் இக்கனவை நனவாக்கிய சிற்பக் கலைஞர்கள், ஒப்பந்தக்காரர்கள், ஆயர்கள், பங்குத்தந்- தயர்கள், பங்குப் பேரவையினர் மற்றும் தன்னார்வலர்களின் ஊக்குவிப்பும், அர்ப்பணிப்பான சேவையும் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படும்.

புனித யாக்கோபு அப் போஸ்தலர் திருவிழாத் திருநாளின் முன்னிரவில், புதிய தேர் கொடி- மரத்தைச் சுற்றித் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கும்போது, அது ஒரு வரலாற்றுப் பாரம்பரியத் தின் மீளுருவாக்கத்தை மட்டுமல்லாமல், அத்தனை இன்னல்களையும் தாண்டி விசுவாசம், நம்பிக்கை மற்றும் மன உறுதியுடன் எழுந்து நிற்கும் ஒரு சமூகத்தின் ஆன்மீக வெற்றியையும் பறைசாற்றி நிற்கும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வைக் கண்குளிரக் கண்டு மகிழவும், ஒரு தலைமுறையைக் கடந்து மீட்கப்பட்டுள்ள இப்பாரம்பரியக் கொண்டாட்டத்தில் பங்கேற்கவும் அடியார்கள், பக்தர்கள் அனைவரும் ஒன்றிணைவோம்.





அருட்திரு. கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்.

# க.பொ.த.சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் (வினாப்பத்திரம் - 04)

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க பின்வரும் எந்த விடயத்துடன் தொடர்புடையது.
1. நம்பிக்கை அறிக்கை 2. திருப்பலி
3. நாளாந்த வாழ்வு 4. மேற்கூறிய யாவும் சரி

02. திருச்சபையின் தலையும், உடலுமாகக் கருதப்படுபவர்கள்.
1. கிறிஸ்து, திருநிலையினர் 2. பொதுநிலையினர்
3. கிறிஸ்து, இறைமக்கள், 4. இறைமக்கள், கிறிஸ்து

03. அரசனுடைய வேண்டுகோளின்படி இலங்கைக்கு முதன்முதலாக வருகை தந்த பிரான்சிஸ்கன் மறைபோதகர்கள் கால்பதித்த காலப்பகுதி
1. கி.பி.1643 2. கி.பி.1543
3. கி.பி.1606 4. கி.பி.1525

04. போர்த்துக்கேயர் இலங்கை வந்த காலப்பகுதியில் கோட்டை இராட்சியத்தை ஆட்சி செய்த மன்னன்.
1. பராக்கிரமபாகு 2. 2ம் இராஜசிங்கன்
3. விமலதர்ம சூரியன் 4. 6ம் புவனேகபாகு

05. புனித யோசவ்வாஸ் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஆண்டு.
1. கி.பி.1676 2. கி.பி.1673 3. கி.பி.1677 4. கி.பி.1608

06. கண்டிக்குச் சென்றபோது………. எனக் குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமானது.
1. போதகர் 2. ஒற்றன் 3. பணியாளன் 4. விரோதி

07. இலங்கையில் 2012ம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட மறைமாவட்டம்.
1. திருகோணமலை மறைமாவட்டம் 2. மன்னார் மறைமாவட்டம்
3. மட்டக்களப்பு மறைமாவட்டம் 4. இரத்தினபுரி மறைமாவட்டம்

08. "இந்நிலையில் நீங்கள் ஒன்றாகக் கூடிவந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்து அல்ல" இவ்வார்த்தைப்பகுதி அடங்கியுள்ளது.
1. 1கொரி. 10:16 2. 1கொரி. 5:8 3. தி.ப. 2:42 4. 1கொரி. 11:20

09. மெல்கிசெதேக் எந்நகரின் குரு ஆவார்.
1. தர்சு 2. சாலேம் 3. தமஸ்கு 4. எரிக்கோ

10. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும், உச்சியும்
1. குருத்துவம் 2. உறுதிப்பூசுதல் 3. நற்கருணை 4. திருமணம்

11. திப்பலியில் தம்மையே தந்தைக்குப் பலியாக ஒப்புக்கொடுத்து ….. வழியாகத் தம்மையே எமக்கு உணவாகத் தருகின்றார். இடைவெளிக்குப் பொருத்தமானது
1. நன்றி 2. நற்கருணை் 3. பானம் 4. வழிபாடு

12. நற்செய்தியாளர் நால்வரும் குறிப்பிட்ட ஒரே ஒரு அருங்குறி இதுவாகும்.
1. கானாவூரில் தண்ணீரை இரசமாக்கியது 2. பெரும்பாடுள்ள பெண்ணைக் குணமாக்கியது
3. அப்பங்களைப் பலுகச் செய்தது 4. இறந்தோரை உயிர்த்தெழச் செய்தது

13. இத்தாலியில் இடம்பெற்ற புதுமைக்குரிய காலப்பகுதி
1. கி.பி.800 2. கி.பி.700 3. கி.பி.750 4. கி.பி.850

14. இயேசுக்கிறிஸ்து தமது சோதனைகளை வென்று தான் வளர்ந்த ஊராகிய ……. வந்தார்
1. ஜெருசலேமிற்கு 2. நாசரேத்துக்கு 3. கலிலேயாவிற்கு 4. கானாவிற்கு

15. இயேசுகிறிஸ்துவிற்கு திருமுழுக்கு வழங்கியவர்
1. எலியா 2. எலிசா 3. திருமுழுக்கு யோவான் 4. எசாயா

16. 'இயற்கைக்கு மாறாக இடம்பெறும் நிகழ்வு புதுமை ஆகும்' எனக் கூறியவர்.
1. புனித அம்புறோஸ் 2. புனித 2ம் அருள்சின்னப்பர்
3. புனித 23ம் அருளப்பர் 4. புனித அகுஸ்தீனார்

17. எழுபத்திரெண்டு பேரின் மறைத்தூதுப்பணி பற்றிக் குறிப்பிடும் ஒரேயொரு நற்செய்தி நூல்.
1. மாற்கு 2. யோவான் 3. லூக்கா 4. மத்தேயு

18. யோசவ்வாஸ் இலங்கை மக்களின் அவலங்களைக் கேள்வியுற்று இலங்கை வருவதற்காக அங்கத்துவம் பெற்ற சபை
1. ஒறற்றோரியன் சபை 2. தியான சம்பிரதாய சபை
3. இயேசு சபை 4. டொமினிக்கன் சபை

19. இலங்கையின் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.
1. அருட்பணி தாவீது அடிகளார் 2. அருட்பணி தனிநாயகம் அடிகள்
3. கருதினால் கூரே ஆண்டகை 4. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்

20. கிறிஸ்து எம் அனைவருக்காகவும் ஒப்புக்கொடுத்த வாழ்க்கைப்பலியை முன்னெடுத்துச் செல்ல நாம் அனைவரும் …… வேண்டும்.
1. வாழ்பவராக 2. இணைப்பவராக 3. பங்காளராக 4. தனியாக

21. இறையாட்சி என்பது.
1. இறைவிருப்பத்திற்குப் பணிவது 2. அயலவரைப் பகைப்பது
3. இறைவனை அன்பு செய்வது 4. அயலவருக்கு எதிராகச் செயற்படுவது

22. வாழ்வென்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும். கிறிஸ்து எங்கு இருக்கின்றாரோ அங்கு வாழ்வும் இறை ஆட்சியும் இருக்கும் எனக் கூறியவர்.
1. புனித அகுஸ்தீனார் 2. புனித அம்புறோஸ்
3. புனித ஜெறோம் 4. புனித 6ம் சின்னப்பர்

23. இயேசு இறையாட்சி மதிப்பீடுகளை …….. மூலம் கற்பிக்கின்றார்.
1. வாழ்வின் 2. ஒழுக்கத்தின் 3. உவமைகளின் 4. பழக்கவழக்கத்தின்

24. மத்தேயு 5,6,7ம் அதிகாரங்களில் அடங்கியுள்ள மலைப்பொழிவில் இடம் பெறும் படிப்பினைகளுக்கு உட்படாதது.
1. எட்டுப் பேறுகள் 2. அறச்செயல்கள் 3. விருந்தோம்பல் 4. பழிவாங்குதல்

25. தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் …… காண்பர்.
1. மக்கள் 2. விண்ணரசு 3. கடவுளைக் 4. ஆறுதல்

26. இறையாட்சி பற்றிய உவமைகளில் அடங்காதது.
1. விதைப்பவன் உவமை 2. நல்ல சமாரியன் உவமை
3. வயலில் தோன்றிய களைகள் உவமை 4. முத்து உவமை

27. எட்டுப்பேறுகள் பற்றிக் கூறும் நற்செய்திகள் எவை?
1. மத்தேயு, மாற்கு 2. யோவான், லூக்கா 3. மத்தேயு, லூக்கா 4. மாற்கு, யோவான்

28. இலங்கையின் ஒழுக்க விழுமியங்களில் பிரதிபலிக்கும் இறை ஆட்சியின் மதிப்பீடுகள் அல்லாதது.
1. கரங்களைக் குவித்துக் கடவுளுக்கு ஸ்தோத்திரம் சொல்லுதல்
2. பெரியோரை மதித்தல்
3. பெற்றோர் ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்
4. மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளிக்காமை

29. ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி ….. உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். இடைவெளிக்குப் பொருத்தமானது.
1. உலகிற்கு 2. இறையாட்சிக்கு 3. வாழ்விற்குள் 4. ஆட்சிக்கு

30. "திருமுழுக்கின் மூலமாக நீங்கள் தூய ஆவியின் ஆலயங்கள் ஆனீர்கள்." இக் கூற்றுக்குரியவர்.
1. புனித திருத்தந்தை பெரிய லியோ 2. புனித திருத்தந்தை 23ம் யோவான்
3. புனித தித்தந்தை 2ம் யோண்பவுல் 4. புனித திருத்தந்தை 6ம் சின்னப்பர்

31. ஞானப் பெற்றோராவதற்கு இருக்க வேண்டிய தகுதிகளில் பொருத்தமற்றது.
1. புகுமுக அருளடையாளங்களைப் பெற்றிருத்தல்
2. 16 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்
3. பிள்ளையின் பெற்றோராக இருத்தல்
4. குழந்தையின் பெற்றோரால் தெரிந்தவர்களாக இருத்தல்

32. திமுழுக்கின் மூலம் ஒரு கிறிஸ்தவன் பெறும் பணிகள் எவை?
1. அரச பணி இறைவாக்குப் பணி 2. குருத்துவ பணி துறவறப் பணி
3. அரச பணி மருத்துவப் பணி 4. இறைவாக்குப் பணி துறவறப் பணி

33. இயேசு திருமுழுக்கு யோவானிடம் யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்குப் பெற்ற போது தூய ஆவி……… அவர் மீது இறங்கி வந்தார். இடைவெளிக்குப் பொருத்தமானது.
1. அரசன் வடிவில் 2. புறா வடிவில் 3. மனித வடிவில் 4. படைப்பின் வடிவில்

34. உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை வழங்குபவர் யார்?
1. ஆயர் 2. குருக்கள் 3. துறவிகள் 4. திருத்தொண்டர்

35. உறுதிபூசுதல் பெறுவதற்கான தகுதிகள் அல்லாதது?
1. திருமுழுக்குப் பெற்றிருத்தல் 2. முழுமையான மறை அறிவைப் பெற்றிருத்தல்
3. 10 வயது நிறைந்தவராய் இருத்தல் 4. நம்பிக்கையை வெளிப்படுத்தல்

36…….. இருக்கும் கிறிஸ்தவனாக இருப்பின் எந்த ஒரு கத்தோலிக்க குருவானவருக்கும் உறுதிபூசுதல் அருளடையாளத்தை வழங்க அனுமதி உண்டு.
1. மரணத்தருவாயில் 2. நோயுற்று 3. சுகதேகியாக 4. தைரியசாலியாக

37. "வாழ்வு தரும் உணவு நானே என்னிடம் வருபவருக்குப் பசியே இராது" என கூறும் நற்செய்தியாளர்.
1. மத்தேயு 2. யோவான் 3. லூக்கா 4. மாற்கு

38. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் எழுதிய நூல்கள்.
1. தேவவேத புராணம், திருவிவிலியம் 2. காவியம், புராணம்
3. தேவவேதபுராணம், வேதகாவியம் 4. திருக்குறள் காவியம்

39. விளங்கிக் கொள்ளுங்கள் எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையுமே அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது - எனக் கூறியவர்.
1. அன்னை திரேசா 2. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்
3. திருத்தந்தை 14ம் லியோ 4. புனித யோசேவ்வாஸ் அடிகளார்

40. "கிறிஸ்து இயேசு திருச்சபையில் எப்பொழுதும் உடனிருப்பது"
1. கத்தோலிக்கம் 2. ஏகம் 3. தூய்மை 4. அப்போஸ்தலிக்கம்

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 - 1 | 11 - 2 | 21 - 1 | 31 - 3 |
| 2 - 3 | 12 - 3 | 22 - 2 | 32 - 1 |
| 3 - 2 | 13 - 1 | 23 - 3 | 33 - 2 |
| 4 - 4 | 14 - 2 | 24 - 3 | 34 - 1 |
| 5 - 1 | 15 - 3 | 25 - 3 | 35 - 3 |
| 6 - 2 | 16 - 4 | 26 - 2 | 36 - 1 |
| 7 - 3 | 17 - 3 | 27 - 3 | 37 - 2 |
| 8 - 4 | 18 - 1 | 28 - 4 | 38 - 3 |
| 9 - 2 | 19 - 4 | 29 - 2 | 39 - 4 |
| 10 - 3 | 20 - 3 | 30 - 1 | 40 - 1 |

**யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்**
**யாழ். மறைக்கல்வி நிலையம்.**

## என் கேள்விக்கென்ன பதில்?

நடைபெறும் காலமிது. பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையால் ஆலய - கோவில் சூழலும், அவற்றை அண்டிய பகுதிகளும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுகள் பரந்து கிடப்பதைக் காணலாம். மேலும், பல ஆலயங்களில் அன்னதானத்தை 'ஷொப்பிங் பாக்'குகளில் (shopping bags) பரிமாறுவதையும் பார்க்கலாம். பக்தர்கள், அடியவர்கள் அதனை உண்டுவிட்டு, மிகுதி உணவை அப்படியே 'ஷொப்பிங் பாக்'குகளோடு சேர்ந்து வீசிவிடுகிறார்கள். கால்நடைகள் பொலித்தீனோடு சேர்த்து வீசப்பட்ட உணவைத் தின்கின்றன. அதனால், கால்நடைகளுக்கும், பின்னர் மனிதர்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துகள் ஏராளம் காத்திருக்கின்றன. இவற்றை எல்லாம் நாங்களும் நம்மக்களும் அறியாதவர்கள் அல்ல. இப்படிப்பட்ட விடயங்களில் எமது கரிசனை அறவே இல்லை என்பது பெரும் கவலை, வேதனை! மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ், 'லவ்டாத்தோ சி' (Laudato si) 'உமக்கே புகழ் உண்டாகுக' என்ற திருத்தூது மடலை 2015ம் ஆண்டில் வெளியிட்டார். எத்திருத்தூது மடலும் பெறாத முக்கியத்துவத்தை 'லவ்டாத்தோ சி' பெற்றுக் கொண்டது. அந்தளவிற்கு இத்திருத்தூது மடல் குறிப்பிடும் விடயம் முக்கியத்துவம் பெற்றது - பெற்றிருக்கிறது. அடிப்படையில் 'லவ்டாத்தோ சி' சுற்றுச்சூழல் சீரழிவில் இருந்தும், நாம் வாழும் சூழல் வெப்ப மயமாதலில் இருந்தும் பூமியாகிய நம் எல்லோருக்கும் பொதுவான இல்லத்தைப் (common home) பாதுகாப்பது நமது அறக்கடன் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.உலகம் பூராகவும் உள்ள தொடர்புசாதனங்கள் ஊடாக இச்செய்தி உலகின் கடையெல்லைவரை பரப்பப்பட்டது. நமது மறைமாவட்டங்கள் எல்லாம் பக்கம் பக்கமாகத் தமது பத்திரிகைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆண்டு முழுவதும், ஏன் சில ஆண்டுகளாகக்கூட எழுதி வந்தன, வருகின்றன. நூற்றுக்கணக்கான நூல்கள், பூமியாகிய நமது பொது இல்லத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டு இருக்கின்றன. ஆலயங்களை கோவில்களைச் சுற்றி, ஆலய, கோவில் பகுதிகளில் பொலித்தீன், சொப்பிங் பாக் மயமாகவே இருப்பதைப் பல இடங்களில் அவதானிக்கலாம். இதுபற்றி, மக்களுக்குத் தொடர்ந்து அறிவுரை ஊட்டுவதும், பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல்கள், மற்றும் ஏனைய கழிவுகளைச் சேர்க்கும் இடம் சேர்ப்பதும் இன்றியமையாதது. இவற்றைப் பார்ப்பது பிரதேச சபைகளின் பணியாக இருந்தாலும், ஆலய நிர்வாகங்கள் இவற்றிலும் அக்கறை காட்டவேண்டும். சமய ஆன்மீகத் தலைவர்கள் இவற்றின் மட்டில் அக்கறை கொள்ளவேண்டும். ஆலயம், கோயில் ஆகியவற்றைச் சுற்றி ஆள்கொல்லிகளான பொலித்தீன், பிளாஸ்டிக்குகளால் நிரம்பியிருக்க, நமது ஆலயங்களும் கோவில்களும் மக்களுக்கு எப்படி உண்மை ஆன்மீகத்தைக் கொடுக்க முடியும்? மக்களை எப்படி உண்மை ஆன்மீகத்தில் வளர்க்க முடியும்? "படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்" ஆக இருக்கக்கூடாது! சமய சமூகத் தலைவர்கள், வழிகாட்டிகள், நிர்வாகங்கள் இவற்றின் மட்டில் அக்கறை காட்டி நமது பிரதேசங்கள் ஷொப்பிங் பாக், பிளாஸ்டிக் பயங்கரங்களில் இருந்து மீள ஆவனை செய்யவேண்டும். ●

# கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் தவக்கால நிதி சேகரிப்புகள் – 2026

| இல | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 1 | குருநகர் | 162,500.00 |
| 2. | பேராலயம், யாழ்ப்பாணம். | 130,000.00 |
| 3 | பண்டியந்தாழ்வு | 17,950.00 |
| 4 | பாசையூர். | 100,000.00 |
| 5 | அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம். | 54,560.00 |
| 6 | புனித யுவானியார் ஆலயம், யாழ்ப்பாணம். | 40,000.00 |
| 7. | புனித திரேசா ஆலயம், யாழ்ப்பாணம். | 19,520.00 |
| 8. | கொழும்புத்துறை | 77,000.00 |
| 9. | அஞ்சனந்தாழ்வு | 5,100.00 |
| 10. | நாவாந்துறை | 60,000.00 |
| 11. | திருநெல்வேலி, கோப்பாய் | 22,500.00 |
| 12. | கொய்யாத்தோட்டம் | 7,300.00 |
| 13. | மணியந்தோட்டம் | 15,000.00 |
| 14. | பண்டத்தரிப்பு | 21,000.00 |
| 15. | ஆனைக்கோட்டை | 53,000.00 |
| 16. | உரும்பிராய் | 30,000.00 |
| 17. | இளவாலை | 22,480.00 |
| 18. | போயிட்டி, இளவாலை | 32,000.00 |
| 19. | புனித யாகப்பர் ஆலயம், இளவாலை | 10,000.00 |
| 20. | மானிப்பாய் | 60,000.00 |
| 21. | பெரியவிளான், இளவாலை | 34,500.00 |
| 22. | சில்லாலை | 11,000.00 |
| 23. | சுன்னாகம் | 25,400.00 |
| 24. | ஊறணி | 5,000.00 |
| 25. | குளமங்கால், மல்லாகம். | 30,170.00 |
| 26. | மல்வம்,உடுவில் | 25,000.00 |
| 27. | நவாலி | 25,000.00 |
| 28. | மாதகல் | 23,000.00 |
| 29. | மணற்காடு | 30,000.00 |
| 30. | பளை | 20,500.00 |
| 31. | சக்கோட்டை | 11,000.00 |
| 32. | கரவெட்டி | 33,000.00 |
| 33. | மிருசுவில் | 85,000.00 |
| 34. | ஒட்டகப்புலம். | 31,270.00 |
| 35. | பருத்தித்துறை | 55,000.00 |
| 36. | அச்சுவேலி | 15,500.00 |
| 37. | சாவகச்சேரி | 10,320.00 |
| 38. | செம்பியன்பற்று | 20,850.00 |
| 39. | கட்டைக்காடு | 30,000.00 |
| 40. | பலாலி | 26,200.00 |
| 41. | புங்குடுதீவு | 10,000.00 |
| 42. | நாரந்தனை | 15,750.00 |
| 43. | ஊர்காவற்றுறை | 20,000.00 |
| 44. | மண்டைதீவு | 10,040.00 |
| 45. | அல்லைப்பிட்டி | 6,320.00 |
| 46. | எழுவதீவு | 64,130.00 |
| 47. | நெடுந்தீவு | 12,000.00 |
| 48. | கரம்பன் | 6,000.00 |
| 49. | சாட்டி | 12,000.00 |
| 50. | உருத்திரபுரம் | 7,000.00 |
| 51. | கிளிநொச்சி | 15,200.00 |
| 52. | பரந்தன் | 8,000.00 |
| 53. | மல்லாவி | 4,040.00 |
| 54. | முழங்காவில் | 4,100.00 |
| 55. | இரணைமாதா நகர் | 10,000.00 |
| 56. | வட்டக்கட்சி | 11,000.00 |
| 57. | பூநகரி | 14,000.00 |
| 58. | வலைப்பாடு | 30,000.00 |
| 59. | குமுழமுனை | 10,000.00 |
| 60. | அக்கராயன். | 15,000.00 |
| 61. | தர்மபுரம் | 6,050.00 |
| 62. | புதுக்குடியிருப்பு | 40,000.00 |
| 63. | கூழாமுறிப்பு | 14,000.00 |
| 64. | முல்லைத்தீவு | 53,000.00 |
| 65. | முகத்துவாரம் | 11,050.00 |
| 66. | சிலாவத்தை | 10,000.00 |
| 68. | அளம்பில் | 50,000.00 |
| 69. | கொக்கிளாய் | 5,000.00 |
| 70. | இரணைப்பாலை | 21,000.00 |
| 72. | உடையார்கட்டு | 2,500.00 |
| | மொத்தம் | 1,984,800.00 |

## இறைவார்த்தை நம் இதயங்களில் பலன்தர அனுமதிப்போம்: திருத்தந்தை

கோடை விடுமுறைக் காலத்தில் இறைவார்த்தையைக் கேட்பதற்கும், வாசிப்பதற்கும், தியானிப்பதற்கும், அமைதியிலும் இறைவேண்டலிலும் நேரம் ஒதுக்குமாறு திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். காஸ்தல் கந்தோல்போவில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கிய நண்பகல் மூவேளை இறைவேண்டல் உரையில் இவ்வாறு மொழிந்த திருத்தந்தை, அந்நாளின் நற்செய்தியில் இடம்பெறும் விதைப்பவர் உவமையை (மத் 13:1-23) மேற்கோள் காட்டி இறைவன் தனது வார்த்தையை மனித இதயங்களில் தாராளமாக விதைப்பதையும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் செயல்படுவதையும் எடுத்துரைத்தார். இயேசு கிறிஸ்துவே தந்தையால் உலகில் விதைக்கப்படும் உயிருள்ள விதை என்றும், மனிதரின் மீட்புக்காக தமது உயிரை அர்ப்பணித்த அவர், பலன்தரும் விதையாக உலகில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார் என்றும் திருத்தந்தை கூறினார்.



# 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்துக்கள்

**திரு.திருமதி பீற்றர் சறோஸ்**

**28.06.2026**

இறைவன் திருவருளால்
இல்லற வாழ்வில் ஐம்பது
ஆண்டுகள் கடந்தும்
அன்பு குறையாத
தங்கமாய் மின்னும்
உங்கள் வாழ்வில்
ஆனந்தம் பெருக
ஆண்டவன் அருள் துணையும்
காணிக்கை அன்னையின் ஆசீரும்
நிறைந்திட மன மகிழ்வுடன்
வாழ்த்துகின்றோம்.

பள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

# விண்ணக வாழ்வின் 6ம் ஆண்டு நினைவு

பிறப்பு 04 . 07 . 1972



இறப்பு 20 . 07 . 2020

அமரர். **சவரிமுத்து கிறிஸ்ரியன் அலெக்சியூஸ்**

'வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்'

அவனியை விட்டு ஆண்டவன் அடியில் நீர் சென்று
ஆண்டுகள் ஆறு சென்றாலும் நாட்கள் ஆறு போலவே நமக்கு
உன்னத தேவன் சந்நிதியிலே நீவீர் அமைதியில் இளைப்பாறிட
இறைஞ்சுகின்றோம் இறைவனை
ஏற்றருளும் தந்தையே எம் செபங்களை ஏற்றருளும்
எம் துயரத்தில் துணையாயிரும்.

இளவாலை மேற்கு
இளவாலை

AD-147

குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு

'நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன'

பிறப்பு 12 . 09 . 1946



இறப்பு 25 . 06 . 2025

அமரர்

**செபஸ்தியாம்பிள்ளை அன்ரன் இரத்தினசிங்கம்**

தந்தாய் அன்பிற்கு இருப்பிடமாய் நல்ல மனிதனாய்
இறைப்பற்றிலும் இல்லறவாழ்விலும் வாழ்ந்து முடித்தீரே அப்பா.
நீர் துயில் கொண்டு ஆண்டொன்று ஆகிவிட்டதே
உங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காய் மன்றாடுகின்றோம்.

AD-145

குடும்பத்தினர்

## முல்லைத்தீவு மறைக்கோட்டப் பங்கு அன்பியப் பயிற்சியும் ஒன்றுகூடலும்



யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட முல்லைத்தீவு மறைக்கோட்டப் பங்கு அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான அன்பியப் பயிற்சியும் ஒன்றுகூடலும் கடந்த 20ஆம் திகதி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட அன்பிய இணைப்பாளர் அருட்தந்தை அஜந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் கிளறேசியன் சபை அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் மற்றும் அருட்தந்தை அஜந்தன் ஆகியோர் இணைந்து அன்பிய ஏழு படிமுறை தொடர்பாகவும் அன்பிய வாழ்வு தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கினர். தொடர்ந்து முல்லைத்தீவு மறைக்கோட்டச் செயற்குழு மற்றும் அன்பிய ஊக்குவிப்பாளர்கள் குழு தெரிவும் இடம்பெற்றது.

செயற்குழுத் தெரிவில் சிலாவத்தைப் பங்கைச் சேர்ந்த திருமதி சுபா அவர்கள் செயலாளராகவும் இரணைப்பாலை பங்கைச் சேர்ந்த திருமதி ஜெயசீலி அவர்கள் உப செயலாளராகவும் முல்லைதீவுப் பங்கைச் சேர்ந்த திருமதி. மரியசீலி அவர்கள் பொருளாளராகவும் அளம்பில் பங்கைச் சேர்ந்த செல்வன் ஜெஸ்மின் ஜோன் அவர்கள் ஊடக உதவியாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை இராஜசிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் 57 அன்பிய ஊக்குவிப்பாளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## முன்பள்ளிச் சிறார்களின் 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டு விழா



இளவாலை, மாரீசன்கூடல் புனித கயித்தார் முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா கடந்த 19ஆம் திகதி புனித கயித்தார் ஆலய முன்றலில் நடைபெற்றது. முன்பள்ளிக் காப்பாளர் அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் வழிநடத்தலில் முன்பள்ளி ஆசிரியர் திருமதி அருந்தவராணி அவர்களின் நெறிப்படுத்தலில் திருமதி நிதர்சனா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறார்களின் யோனா, நெகேமியா ஆகிய இரு இல்லங்களுக்கிடையிலான மைதான விளையாட்டுகளுடன் சிறப்பு நிகழ்வுகளான வினோத உடைப் போட்டி, இசையும் அசைவும், பெற்றோருக்கான விளையாட்டுக்கள் மற்றும் பரிசளிப்பும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இளவாலை றோ.க.த ஆண்கள் பாடசாலை அதிபர் திரு. கந்தசாமி பிரதீபன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சண்டிலிப்பாய் முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி டெறிந்திரன் ஆன் நிரோஸா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் புனித கயித்தார் ஆலய அருட்பணிச் சபைச் செயலாளர் திரு. கயித்தாம்பிள்ளை அன்ரனிஸ் அவர்கள் கௌரவ விருந்தின ராகவும் கலந்துகொண்டனர்.

## முன்பள்ளிச் சிறார்களின் சந்தை நிகழ்வு



சுன்னாகம் புனித அந்தோனியார் முன்பள்ளிச் சிறார்களின் சந்தை நிகழ்வு கடந்த 21ஆம் திகதி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் நடை பெற்றது. சிறார்களின் விற்றல் வாங்கல் திறனை மேம்படுத்தும் நோக்கோடு முன்பள்ளி ஆசிரியர்கள் திருமதி பேனாட் கலஸ்ரின் மற்றும் திருமதி றெக்ஸலா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இச்சந்தை நிகழ்வை சுன்னாகம் பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின்ஸ் அவர்கள் ஆரம்பித்துவைத்தார். இந்நிகழ்வில் சிறார்களால் காலை உணவு, சிற்றுண்டிகள், மரக்கறி, பழங்கள் , ஆடைகள், குளிர்பானங்கள், அழகுசாதனப் பொருட்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன. அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை அல்றின், அருட்சகோதரி டிலானி, ஆசிரியர்கள், பெற்றோர்கள், பங்குமக்கள், நலன் விரும்பிகளெனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## குருநகர் பங்குப் பிள்ளைகளுக்கான முதல்நன்மை





குருநகர் பங்கு பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி இன்று நடைபெற்றது. பங்குத்தந்தை அருட் தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களின் தலைமையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 109 சிறார்கள் முதல்நன்மை

## முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



நாரந்தனை பங்கு பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது.

புனித வளனார் அச்சக முகாமையாளர் அருட்தந்தை எஸ்.எயின்சிலி றொஷான் அவர்களின் தலைமையில் புனித பேதுரு பவுல் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 21 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை விமலசேகரன் வசந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 21ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை நாவாந்துறை பங்கின் உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை ஸ்ரனிஸ்லொஸ் ஸ்ரிபன்ராஜ் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா மற்றும் ஆயத்தநாள் மறையுரைகளை இந்தியாவிலிருந்து வருகைதந்த திருச்சி மறைமாவட்ட அருட்தந்தை அல்பேட் அவர்கள் வழங்கியிருந்தார். திருவிழா திருப்பலி நிறைவில் புனிதரின் திருச்சொருப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



அக்கராயன் பங்கின் ஸ்கந்தபுரம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை அல்பேன் சேகர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது. 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 19ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை மரிய செபஸ்ரியன் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை கொக்கிளாய் பங்குத்தந்தை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை யோகராஜ் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள், பிறசமய மக்களெனப் பலரும் கலந்துசெபித்தனர்.

## சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய திருவிழா



புனித யுவானியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 23ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் உரோமா புரியிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித யுவானியாரின் திருப்பண்டம் ஆலயத்தில் கொலுவேற்றிவைக்கப்பட்டது. திருவிழா அன்று மாலை புனிதரின் திருச்சொருபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் இறைமக்கள் பக்தியுடன் பங்குபற்றியிருந்தனர்.

## உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரின் ஆராதனை



உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரின் ஏற்பாட்டில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் முன்னெடு க்கப்பட்ட புதுப்பித்தலின் தூய ஆவியார் ஆராதனை ஆடி மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. பேராலயப் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் உதவியுடன் உயிர்த்த ஆண்டவர் சமூக நிறுவுனர் திரு. லலித் பெரேரா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறைவார்த்தைப் பகிர்வு, நற்கருணை ஆராதனை, புகழ்ச்சி ஆராதனை, குணமாக்கல் வழிபாடு என்பவற்றுடன் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் திருப்பலியும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் ஆயிரத்திற்கும் அதிகமான இறைமக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்

## நவாலியில் நினைவேந்தல்

இலங்கை அரச விமானப்படையினரால் யாழ்ப்பாணம் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த 09ஆம் திகதி உணர்வுபூர்வமாக அங்கு அனுஸ்டிக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயரஞ்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்டைக்காடு – வெற்றிலைக்கேணி பங்குத்தந்தை அருட்தந்தை விமலசேகரன் வசந்தன் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. 1995ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் படைநடவடிக்கையால் வலிகாமம் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் புகலிடம் தேடிய நிலையில் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் தஞ்சமடைந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களை இலக்குவைத்து இலங்கை விமானப்படையினரால் பயங்கரவாதக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் ஆலயத்திலிருந்த குழந்தைகள் பெண்கள் உட்பட 147க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 400க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு ஆடி மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.